உ

சிவமயம்

# சைவமன்றம்

# சிட்னி, அவுஸ்திரேலியா

# ஆன்மீகச் சிந்தனைத் தொகுப்பு

## கலாநிதி இ. ஸ்ரீ இரவீந்திரராஜா

## கல்விப் பொறுப்பாளர் 2000–2002

**2001/2002 களில் வாரம் தோறும்**

**சிட்னி முருகன் கோயிலில் அடியார்களின் நலன் கருதி**

**அறிவிப்புப் பலகையில் போடப்பட்ட**

**ஆன்மீகச் சிந்தனைகளின் தொகுப்பு**

**இது ஒரு சைவமன்ற கல்விப் பிரிவின்**

**2002 மகோற்சவ விசேட வெளியீடு**

**The Saiva Manram Inc., 217,**

**Great Western Highways,**

**Mays Hills, NSW 2145, Australia.**

**http://www.sydneymurugan.org.au**

# ஆன்மீகச் சிந்தனைத் தொகுப்பு

## சிந்தனை 1

அணுகு துணையறியா ஆற்றோனி லைத்தின்
உணர்வை யுணரா துயிர். திருவருட்பயன்.

ஒரு வழிப்போக்கன் தான் அடைய வேண்டிய இடத்திலே கண்ணுள்ளவனாய் அதையே எண்ணிக் கொண்டு போவானாகில், அவனுக்குப் பின்னே துணையாகப் போகின்றவனை முற்றாக மறந்து விடுவான். அவன் சேரும் இடத்தை எண்ணானாயின், தன்னுடைய துணையை அறிந்து துணைவன் என்று மகிழ்வான். இது போலச் சில ஆன்மாக்களுக்குத் திருவருளை உணரும் அறிவிருந்தும், அவை உலக இன்பத்திலே கண்ணாயிருத்தலால் திருவருளை நினைப்பதில்லை. அந்த ஆன்மாக்கள் ஒருவகையானவை. ஐம்பொறிகள் ஆன்மாவை அறியுஞ் சத்தியில்லாதன. ஆவைபோல வேறொருவகை ஆன்மாக்கள் திருவருளை அறியுஞ் சக்தியில்லாமல் நிற்கின்றன. சிலகாலஞ் சென்றபின், ஆணவப்பீடை வேண்டிய அளவு கெட, இவை திருவருளை அறியும் ஆற்றலைப் பெறும்.

---

## சிந்தனை 2

கிடைக்கத் தகுமோநற் கேண்மையார்க் கல்லால்
எடுத்துச் சுமப்பானை இன்று.

திருவருட்பயன்.

திருவருளைச் சாராதாருடைய வினையையும் பயனையும் கடவுள் சுமக்கமாட்டார். ஒருவன் வறியவனாய் இருக்கும் போது அவனுடைய நல்ல சுற்றத்தார் அவனுக்குள்ள சுற்றத்தவர் அவனுக்குள்ள கடன்களைக் கொடுத்து அவனைத் தாங்கி வருவதுண்டு. இப்படியே நல்ல சுற்றத்தவர் அவனுடைய சுமையைப் பலவகையாகச் சுமக்கின்றனர். அது போலக் கடவுள் தம்மைச் சார்ந்த மெய்யடியாருடைய ஆகாமிய வினைகளையும் பிராரத்தின் பயனாகிய இன்ப துன்பங்களையும் தாமே சுமக்கிறார்.

---

## சிந்தனை 3

அறியாமை உள்நின்று அளித்தே காணும்
குறியாகிய நீங்காத கோ.

திருவருட்பயன்

மலம் வலிகெடவே, ஆன்மா ஞானத்தைப் பெறுகின்றது. ஆயினும் அந்த ஞானம் தானாகவே விளங்கமாட்டாது. அதை விளக்கச் செய்தற்கு ஞானாசிரியன் வேண்டும். இது எது போலவென்றால், ஒரு குழந்தையைப் பெறுமுன் ஒரு பெண்ணுடைய சரீரத்திலே முலைப்பாலுக்குக் காரணமாகிய பதார்த்தங்கள் இருக்கவும் முலைப்பால் தோன்றாது. அதுபோல, ஞானாசிரியர் இன்றி ஞானந் தோன்றாது.

---

## சிந்தனை 4

படமாடும் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடும் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடும் கோயில் நம்பவர்க்கொன் றீயில்
படமாடும் கோயில் பகவற்க தாமே. திருமந்திரம்

இவ்வுலகில் இரண்டு கோயில்கள் உள்ளன. ஒன்று படமாடும் கோயில். இது கற்கோயில். மற்றது நடமாடுங் கோயில். இது உயிர்க்கோயில். கொடியாடும் கற்கோயிலில் சிலைவடிவாகக் கடவுள் இருந்தருள் புரிகின்றான். சிலைக் கடவுளுக்கு ஒன்றை நிவேதித்தால் அதை அச்சிலையும் உட்கொள்வதில்லை. அது நடமாடும் கோயில்களான அடியார் பசிக்கு ஆவதில்லை. நடமாடுங் கோயில்களான நம்பவர்க்கும் ஒன்றீந்தால், அது கோயிலிலுள்ள பகவற்கும் ஈந்ததாகும். ஏனெனில், இறைவன் அடியார் வடிவில் நடமாடுகின்றான். உள்ளந்தோறும் அவன் நடம்புரிகிறான். கோயில் நிவேதனத்தைவிட அடியார்க்கு அன்னம் அளித்தல் சிறப்பானது. மகேஸ்வரன் அடியாருட் கோயில் கொண்டிருக்கின்றான். ஆதலால் அடியார் வழிபாடு மகேஸ்வர பூசையாகும்.

## சிந்தனை 5

ஒவ்வொரு ஆண், பெண் குழந்தையையும் கடவுளாக எண்ணுங்கள். நீங்கள் யாருக்கும் உதவி செய்ய முடியாது. சேவை தான் செய்ய முடியும். கடவுளின் குழந்தைகளுக்குச் சேவை செய்யுங்கள். உங்களுக்கு அந்தப் பேறிருந்தால் அதன் மூலம் ஆண்டவனுக்குச் சேவை செய்தவர்கள் ஆவீர்கள். ஆனால் உங்களைப் பற்றி அதிகம் நினைத்துக் கொள்ள வேண்டாம். மற்றவர்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்காமலிருக்க, உங்களுக்கு இது கிடைத்தது ஆண்டவனுடைய அருள் உங்களிடம் இருப்பதற்கு அறிகுறி என்பதை உணருங்கள். இந்தச் சேவையே இறைவனின் வழிபாடு எனச் செய்யுங்கள். எனது நன்மைக்காகவே நான் கடவுளை வழிபடுகிறேன். அதே போல் நம்முடைய நன்மைக்காகவே நாம் ஏழைகளிடம் கடவுளைக் கண்டு வழிபட வேண்டும். தங்களுக்குச் சேவை செய்து அதன் மூலம் கடவுளை வழிபடுவதற்கு நமக்கு வாய்ப்பு அளிப்பதற்காகவே ஏழைகளும் தரித்திரர்களும் தோன்றியிருக்கிறார்கள் போலும்! அதற்காகவே கடவுளும் நோயாளி, பைத்தியக்காரன், தொழுநோயாளி, பாவி முதலிய வடிவங்களில் தோன்றுகிறான் போலும்! மற்றவர்கள் மேல் அதிகாரம் செலுத்தும் எண்ணத்தை விட்டுவிடுங்கள். மற்றவர்களுக்கு நீங்கள் நல்லது செய்ய முடியும் என்ற எண்ணத்தையும் விட்டு விடுங்கள். ஒரு செடிக்குச் செய்யக் கூடிய அளவுதான் நீங்கள் ஒருவருக்கு உபகாரம் செய்யலாம்.

சுவாமி விவேகானந்தர்

## சிந்தனை 6

உங்கள் உடலை நினைத்து அது நலமும் வலிமையும் பெற்றதாகக் கருதுங்கள். உடல் சிறந்த கருவி. அது வைரம் போல் உறுதி பெற்றதாக நினைத்திடுக. உடல் உதவியினால் தான் வாழ்கை என்னும் கடலை நாம் தாண்டிடல் இயலும். வலிமை அற்றவர்கள் விடுதலை பெறார். எல்லாப் பலவீனத்தையும் உதறித் தள்ளி விடுக. மனத்திடம் அது வலிமை பெற்றதாகக் கூறிடுக. உங்களிடம் அளவில்லா தன்னம்பிக்கை வந்துவிடும்.

சுவாமி விவேகானந்தர்

## சிந்தனை 7

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக்கடன் அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லாராம்
கல்லாத மூடர் கருத்தறியாரே. திருமந்திரம்

அஞ்ஞானிகளைப் பார்க்கவும் கூடாது. அஞ்ஞானிகள் சொற் கேட்கவும் கூடாது. அஞ்ஞானிகளுக்கு அஞ்ஞானிகளே நல்லவர் ஆவார். அஞ்ஞானிகள் பிறப்பின் நோக்கத்தை அறியமாட்டார்கள்.

**The company of the non-seeker of Truth should be spurned. Their words too should be spurned. The ignorant people enjoy the company of the ignorant. Ignorant people failed to understand the purpose of birth.**

*Thirumanthiram*

## சிந்தனை 8

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

பிறப்புத் துன்பம் (பிணி, மூப்பு, சாக்காடு) ஆதல் அறிந்தவன் ஒன்றை வேண்டின் பிறவாமையையே விரும்ப வேண்டும். அப்பிறவாமை தான் ஒரு பொருளையும் விரும்பாமையால் அவனுக்குத் தானே உண்டாகும்.

**Do not long for anything? Long for not being born again; this can be achieved if you cease your desire.**

மனத்துாய்மை செய்வினை துாய்மை இரண்டும்
இனத்துாய்மை துாவா வரும்.

ஒருவனுக்கு மனத்துாய்மையும் செயல் துாய்மையும் சேர்ந்த இனத்தைப் பொறுத்தே ஏற்படும்.

**Purity of heart and purity of conduct both depend upon association with the pure.**

*Thirukkural*

## சிந்தனை 9

அன்பு என்னும் நல்லியல்பு எல்லாரிடமும் இருக்கின்றது. இந்த அன்பை உயிர்கள் உயிர்களிடத்துச் செலுத்துகின்றன. இதே அன்பை மனிதன் கடவுளிடத்திலும் செலுத்துகிறான். அதைக் கடவுளிடம் வைக்குங்கால் அது பக்தி என்று பெயர் பெறுகிறது. பக்தியைப் பெருக்குவது நல்ல ஆத்ம சாதனம். தன் உள்ளத்தைக் கடவுளுக்கே உரியதாக ஆத்ம சாதனன் ஒருவன் செய்யவேண்டும். அப்படித் தான் செலுத்துகின்ற அன்புக்குக் கைமாறாகக் கடவுள் இம்மையிலோ அல்லது மறுமையிலோ தனக்கு ஏதாவது உபகாரம் செய்ய வேண்டும் என்று ஒருவன் எதிர்பார்ப்பான் ஆகில் அவன் உள்ளத்தில் உருவெடுக்கின்றது மெய்யன்பன்று. மறுமையில் சொர்க்க பதவி வேண்டுமென்று வழுத்துபவர்கள் இருக்கிறார்கள். இம்மையில் பிணி நீங்க வேண்டும், ஆயுள் அதிகரிக்க வேண்டும், பொருள் மேலும் மேலும் சேர வேண்டும், பதவியும் போகமும் பெருக வேண்டும் என்றெல்லாம் கடவுளிடத்து நயந்து பிரார்த்தனை பண்ணுபவர்கள் இருக்கிறார்கள். தாங்கள் கடவுளிடம் வைக்கும் அன்புக்குக் கைமாறாகக் கடவுளிடத்திருந்து தங்களுக்கு என்னென்ன காரியசித்தி கைகூட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் உண்மையான பக்தன் ஒருவனுடைய போக்கு அத்தகையதன்று. அவன் இயல்பாகவே இறைவனிடம் அன்பு கொள்கின்றான். ஏன் அவன் அப்படி அன்பு கொள்ளவேண்டும் என்னும் கேள்வி எழ இடமில்லை.

குளிர்ந்த வெளிச்சத்தைக் கொடுப்பது சந்திரனுடைய இயல்பு. அன்பை வாரிப் பொழிவது பக்தனுடைய இயல்பு. அதை அவன் கடவுளிடம் செலுத்துகிறான். போற்றுதற்கு அவரே உரியவர் என்னும் உணர்வு பக்தனுக்கு உண்டாகிறது. முழுமனதோடு அவரை நேசிப்பதில் அவன் பரமதிருப்தி அடைகிறான். இறைவன் அல்லாது வேறு எப்பொருளையும் அவன் பொருளாக மதிப்பதில்லை. ஆதலால் அவன் அன்புக்கு இலக்காக அமைந்திருப்பவர் இறைவனே.

சுவாமி சித்பவானந்தர்

## சிந்தனை 10

தேகம் தேவனின் ஆலயம் எனும் மணிமொழியின் பொருள் பலருக்குத் தெரியாது. வழிபாட்டுக்குரிய, இதயவாசியான இறைவனுக்கு இக்கோயில் எழுப்பப்பட்டதன் காரணம் என்ன? அங்கே அப்படி ஓர் இறைவன் இல்லையேல் அதை ஆலயம் என அழைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் மனிதனின் நடவடிக்கைகள் அனைத்தும் இந்த

அப்பட்டமான உண்மைக்குப் புறம்பானவையாக இருக்கின்றன. இப்போது ஆலயம் கடவுளாகி விடாது என்பதை மறந்து விட்டு அனைத்து வழிபாடுகளும் கோயிலுக்கு (உடல்) செய்யப்படுகின்றன. அதனுள்ளே உறையும் இறைவனுக்காக ஆலயத்தை சுத்தம் செய்யவும் அலங்கரிக்கவும் வேண்டும். அதை இறைவனை உணர்வதற்கு உதவும் நல்ல கருவியாக மாற்ற வேண்டும். அவ்வளவுதான். அதே போலவே உடலும் இறைவனின் ஆலயம் (ஆத்மஸ்வரூபம்).

ஆத்மாவில் ஆழ்ந்த நம்பிக்கை வைக்க வேண்டியதன் அவசியம், ஆத்மாவில் இருந்து பெறப்படும் ஆனந்தம், வழிபாட்டுக்குரியது ஆத்மாவே, அர்ப்பணிக்க வேண்டியது ஆத்மாவிற்கே ஆகியவற்றை மக்கள் மறந்து விட்டு, மக்கள் உடல் மீது ஆழ்ந்த நம்பிக்கை வைப்பது, உடலை அலங்கரிப்பது, உடலுக்காக அர்ப்பணிப்பது ஆகியவற்றில் மூழ்கிவிட்டார்கள். இத்தனை இருப்பினும் உடல் விரைவில் மறையக் கூடியதாயினும் இந்தக் கோயில் மூலமாய் தான் கடவுளைக் காண இயலும். உடல் மூலமாக உள்ளே இருக்கும் ஆன்மாவை உணர இயலும். மனிதனின் முக்கிய கடமை இதுதான். இதைக் கருத்திற் கொண்டு உடல் மீது எப்போதும் கவனம் செலுத்தி அதைக் காப்பாற்ற வேண்டும்.

உள்ளே இருக்கும் இறைவனை அலட்சியப்படுத்தாதீர்கள். பொய்யான, தற்காலிகமான வெளிக்கட்டிடத்தைக் கெட்டியாகப் பற்றாதீர்கள். அதற்காக ஆலயத்தை அழித்து விடக்கூடாது. அதைப் பாராமரிப்பது அவசியமாகும். எது மதிப்பு மிக்கது. அதை அடையச் செயற்படுவது எப்படி என்பதை நீங்கள் ஒருபோதும் மறக்கக்கூடாது. மதிப்பு மிக்கது உள்ளே இருக்கும் ஆன்மாதான்.

## சிந்தனை 11

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம். — திருமந்திரம்

தச்சன் ஒருவன் நல்ல யானையை மரத்தினால் செய்துவிட்டான். இதற்குப் பொருத்தமான வர்ணம் கொடுத்துவிட்டான். குழந்தைகள் எல்லாம் அதைப் பார்த்து, யானை!, யானை! என்று கத்துகின்றன. அந்தக் குழந்தைகளுக்கு அது மரம் என்று தெரியவில்லை. இன்னொரு தச்சன் வந்து அதைப் பார்த்து, இதை எந்த மரத்தில் செய்தாய்? என்று கேட்டான். இவனுக்கு மரம் தான் ஞாபகம் வருகிறது! யானை என்கின்ற நினைப்பு இல்லை. குழந்தைகளுக்கு யானை தான் ஞாபகம் வந்ததே தவிர மரம் என்பது மறைந்து போனது. யானை என்கின்ற நினைப்பு குழந்தைகளுக்கு மரத்தை மறைத்து விட்டது. ஆனால் தச்சனுக்கு யானை என்கின்ற நினைப்பு மறந்து போனது. இது என்ன மரம் என்று மரந்தான் இவனுக்கு நினைப்பு வந்தது.

அப்படி, தத்துவம் எதுவுமே தெரியாமல் குழந்தைகளைப் போல் இருக்கிறவர்களுக்கு அந்த உலகம், இந்த உலகத்திலுள்ள பொருட்கள் எல்லாம் அது, இது என்று தெரிகிறது. எல்லாவற்றிக்கும் காரணம் பரமாத்மாதான் என்று தெரிவதில்லை.

குழந்தைகளுக்கு யானைக்குள் எப்படி மரம் மறைந்து போயிற்றோ, அது மாதிரி, பார்முதற் பூதங்களுக்குள் பரமாத்மா வஸ்த்து மறைந்து போய் விடுகிறது. ஆனால் யானை எப்படி மரத்துள் தச்சனுக்கு மறைந்து போயிற்றோ, அப்படியே ஞானிகளுக்கு, என்னடா இது எல்லாம்? எல்லாம் பரமாத்மாதான் என்று தோன்றுகிறது. இது பூமி, இது ஆகாயம் என்று இருக்கும் பஞ்சபூதங்களெல்லாம், பரமாத்மாதான் என்று பார்க்கின்ற பார்வைக்குள் மறைந்து போகும்.

ஜகத்குரு ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள்

## சிந்தனை 12

நவதா (ஒன்பது விதமான) பக்தியில் அர்ச்சனை ஒருவகையாகும். அர்ச்சனை என்றால் வழிபாடு என்று பொருள். இது சகுண வழிபாடு, நிர்குண வழிபாடு என்று இருவகைப்படும். சாதாரண மனிதருக்கு நிர்குண பூசை செய்வது எளிதல்ல. வெகு காலம் சாதனை செய்து அந்தரங்க சுத்தி அடைந்த பின்னரே இது சாத்தியமாகும். சகுண வழிபாடு ஒருமுறையான பிரார்த்தனையாகும். நிர்குண வழிபாடு ஸ்தூலப் பொருட்களின் உதவியில்லாமல் உள்முகமான பொருட்களுடன் கூடச் செய்யப்படும் பூசையாகும். இந்தப் பூசையில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் மற்றும் பத்துப் புலன்கள் யாவும் கடவுளுக்கு தூப, தீப, நைவேத்தியம் போல அர்ப்பணிக்கப்படுகின்றன. பக்தன் பரப்பிரமனில் லயமாகி விடுகிறான்.

ஆனால் சகுண பக்தி அனைவருக்கும் எளிதானது. ஏனெனில் இப்பூசை வெளியில் கிடைக்கும் பொருட்களுடன் கூடி நேரடியாக செய்யப்படுகிறது. இதில் அந்தரங்க சுத்தமும், நிலையான மனமும் முக்கிய மானவையாகும். பத்ரம் புஷ்பம் பலம் தோயம் என்று கீதையில் பகவான் குறிப்பிடுகிறார். எனவே வெறும் இலை, பூ, கனி, நீர் ஆகியவற்றால் கூட பகவான் திருப்தி அடைகிறார். பக்தன் சிரத்தையுடன் பக்தியுடன் இவற்றை அளிக்கையில் பகவான் அதை நிச்சயம் ஏற்றுக் கொள்வார். அது மட்டுமல்ல, பகவான் சம்சார சாகரத்தையே கடப்பதற்கு பக்தனுக்கு உதவுகிறான்.

பகவானுக்கு எட்டுவகை மலர்கள் மிகவும் பிரியமானவை என்று நமது சாத்திரங்கள் கூறுகின்றன. நமக்குப் பிடித்ததைக் காட்டிலும் கடவுளுக்குப் பிடித்ததை அவருக்கு நாம் அளிக்கும் பொழுது கடவுள் அதிகம் திருப்தி அடைகிறார். இந்த மலர்கள் யாவை என்று நாம் பார்ப்போம். அவையாவன: அகிம்சை, புலனடக்கம், அனைத்து உயிரிடத்தும் இரக்கம், பொறுமை, அமைதி, தவம், தியானம், உண்மை. ஆகவே பக்தி சிரத்தையுடன் அம்மலர்ளை பக்தர்கள் கடவுளுக்கு அளிக்கையில் அவர் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்.

சுவாமி தேவானந்தா (திவ்ய ஜீவன சங்கம், இமயம்)

---

## சிந்தனை 13

வாழ்வும் மனைவியும் மக்கள் உடன் பிறந்தாரும்
அளவே தமக்கென்பர் ஒண்பொருள்
மேவும் அதனை விரிவு செய்வார்க்குக்
கூவும் துணையொன்று கூறுலமாமே. திருமந்திரம்

உலக மக்கள் தமது வாழ்வு, தமது மனைவி, மக்கள், சகோதரர் என்ற வட்டத்துடன் நின்றால் தமக்குப் போதுமானது, வேறொன்றுக்கும் அவர்களுக்கு நேரமில்லை என்று சொல்வர். தம் உடம்புக்குள்ளேயே இயங்கும் ஆத்மாவை உணர்ந்து அதனுடைய ஈடுபாட்டை விரிவு செய்ய எண்ணுபவர்கட்கு ஓம் என்று கூறும் மெய்பொருள் துணைபுரியும்.

**A mundane existence involving family, profession and related activity fills up human life and they do not want to see anything beyond it. But to those who link their energies with Truth and understanding the cosmic consciousness, Aum flowing into them will reveal everything. Eternal help surround them all.**

***Thirumanthiram***

---

## சிந்தனை 14

ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பர் இணையடி
பாரம் உடையவர் காண்பர் பவந்தன்னை
கோர நெருக்கொடு கோங்கு புக்கரே. திருமந்திரம்

அரனைக் காணும் ஆர்வம் உடையவர்கள் அரனைக் காண்பர். அன்பினால் மனக்கசிவு உடையவர்கள் ஆத்ம சக்கரத்தோடு இணைந்து நிற்கும் கருவில் மிதந்த கமலப் பாதத்தைக் காண்பர். உலகப் பாரமுடையவர்கள் பாவத்தையே கண்டு தாங்கொணாத் தொல்லைகளுடன் இறந்து பட்டுச் சுடுகாட்டை அடைவர்.

**Those who are keen on realizing the truth and work tirelessly towards that goals will certainly reach the same goal. Those who love the Lord will reach Him. But those who dabble in the affairs of the world will see sin and suffer it unto the grave.**

***Thirumanthiram***

---

## சிந்தனை 15

குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின்றது போல்
இயக்கில்லை போக்கில்லை ஏனென்பதில்லை
மயக்கத்தால் ஆக்கை வளர்கின்றவாறே. திருமந்திரம்

குயில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பதற்குக் கூடு கட்டுவதில்லை. காகம் கட்டுகின்ற கூட்டுக்குள் அதற்கும் தெரியாமல் முட்டையை இட்டுவிட்டுப் பறந்து போகும். காக்கைக்குத் தன் முட்டைக்கும் குயில் முட்டைக்கும் வித்தியாசம் தெரிவதில்லை. காக்கை அடைகாத்துக் குஞ்சு வளரும். அதே போன்று இந்த உடம்புக்குள் சூக்குமப் பொருள் இருப்பதையும் அதன் இயக்கத்தினையும் போக்கையும் ஏன் எப்படி என்று அறியாத மயக்கத்தில் அம்மனித உடம்பு வளர்கிறது.

**In experiencing his physical dimension, man is led into the belief of its own intrinsic reality. He is oblivious to the cosmic being sustaining his life as the crow in its ignorance settling over the cuckoo’s eggs as well as its own.**

***Thirumanthiram***

---

## சிந்தனை 16

செய்தான் அறிவன் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே உரைத்துப் புகழும் மனிதர்காள்
மெய்யே உரைக்கில் அவ் விண்ணோர் தொழச் செய்வன்
மை தாழ்ந்து இலங்கும் மணிமிடற்றோனே. திருமந்திரம்

கடல் சூழ்ந்த உலகத்தில் அழியும் மாயைப் பொருள்களைப் பற்றியே புகழ்ந்து கதைப்பதைப் படைத்தவன் அறிவான். அவர்கள் ஆத்மா இயங்கும் மெய்பொருளான ஐந்தெழுத்தை உரைக்கில் அஞ்ஞான இருள் அகன்று இலங்கும் மணிமிடற்றண்ணல் அவர்கள் விண்ணோரும் தொழச் செய்வன்.

**The creator knows that the people in this world are engrossed in their false living impervious to the truth – if they would meditate on Aum, the truth, the Lord will make even the celestials worship them.**

***Thirumanthiram***

---

## சிந்தனை 17

சேந்தனை, கந்தனை, செங்கோட்டுவெற்பனை, செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ்நூல் விரித்தனை விளங்குவள்ளி
காந்தனை, கந்தக்கடம்பனை, கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவாதவர்க்கு ஒரு தாழ்வில்லையே.

சேந்தனை, கந்தனை, திருச்செங்கோட்டு மலையின் தலைவனை, ஒளிவீசும் வேலை ஏந்திய மன்னனை, செந்தமிழ் நூல்கட்கு விளக்கம் கூறியவனை, வள்ளி

மணவாளனை, மணம் வீசும் கடப்பம் மாலையை அணிந்தவனை, நீலமயில் வாகனனை இறக்கும் வரையிலும் மறவாது வணங்குபவர்க்கு ஒரு குறையும் இல்லை.

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயல்பொழில் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலாயிரம் கண்படைத்திலனே அந்த நான்முகனே.

திருமால் மருகனை, சிவபெருமானின் புதல்வனை, தேவர்க்கு மேலான தேவனை, மெய்ஞ்ஞான வடிவாம் தெய்வத்தை, உலகில் சேவல் மீன்கள் நிறைந்த வயல்களும் சோலையும் சூழ்ந்த திருச்செங்கோட்டுக் கடவுளை நான் சென்று கண்டு மகிழ்ந்து போற்றித் தொழுவதற்குப் பிரமன் எனக்கு நாலாயிரம் கண் படைக்கவில்லையே!

கந்தரலங்காரம்

---

## சிந்தனை 18

- எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
- எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
- எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்
- உன்னுடையது எதை இழந்தாய்?
- எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு?
- எதை நீ படைத்திருந்தாய்? அது வீணாவதற்கு?
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதைக் கொடுத்தாயோ அது, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ அது நாளை மற்றொருவனுடையதாகும்.
  மற்றொரு நாள் அதுவே வேறு ஒருவருடையதாகும்.
  இந்த மாற்றம் உலக நியதியாகும்.

கீதா சாரம்

---

## சிந்தனை 19

ஓம் த்ரயம்பகம் யஜா மஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உருவாருகமிவ பந்தனான்
மிருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்.

நறுமணம் மிகுந்தவரும் எல்லா ஜீவன்களுக்கு வாழ்வை அளிப்பவரும் முக்கண்ணனுமாகிய சிவபெருமானை வணங்குகின்றோம். வெள்ளரி தன் கொடியினின்றும் விடுவிக்கப்படுவது போல் அமரத்துவத்தின் பொருட்டு அன்னவன் நம்மை மரணத்தினின்றும் விடுவிப்பாராக.

**We worship the three-eyed One (Lord Shiva) who is fragrant and who nourishes well all beings, may He liberate us from death for the sake of Immortality even as the cucumber is severed from its bondage to the creeper.**

---

## சிந்தனை 20

### கஷ்டம் கூட ஒரு அருள் தான்

குழந்தை மண்ணைத் தின்கிறது. அம்மா அதன் கைகளைச் சேர்த்துத் துணியைப் போட்டு கட்டுகிறாள். அது மண்ணைத் தின்னாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் கட்டிப் போடுகிறாள். குழந்தைக்கோ கோபம் வருகிறது, ஓடுகிறது, குதிக்கிறது, கத்துகிறது. தாய் இத்தனையும் பார்த்துச் சிரிக்கிறாளே! இவளுக்குக் கொஞ்சம் கூட இரக்கம் என்பதே கிடையாதா? இந்தத் தாய் தான் நமக்குப் பரம விரோதி! என்று அது

கத்தலாம். ஆனால் காரணம் இல்லாமலா அம்மா தனது பிள்ளையைக் கட்டிப் போட்டிருக்கிறாள்? குழந்தைக்கு நன்மை வரக்கூாது, துன்பந்தான் வரவேண்டும் என்றா கட்டிப் போட்டிருக்கிறாள்?

தெய்வத்தின் கருணை நமக்குத் தெரியாது. நமக்கு நல்லது வந்தாலும் கெட்டது வந்தாலும் இரண்டுக்கும் மூலம் அம்பாளுடைய அருள்தான். நல்லது காரணம் இல்லாத அருள். கஷ்டம் ஒரு காரணத்துக்காக ஏற்படுகின்ற அருள். நல்லது வந்தாலும் கெட்டது வந்தாலும் அவளுடைய அருள் என்று கொள்ள வேண்டும்.

ஜகத்குரு ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

## சிந்தனை 21

மனிதசரீரம் எடுத்த ஆன்மா மிருகசரீரம் எடுக்குமா? என்று கேட்கக்கூடும். எடுக்கமாட்டது என்று சிலர் எண்ணுகிறார்கள். இது பிழையான எண்ணம். அது எடாது என்பதற்கு அவர்கள் சொல்லும் நியாயம் என்னவென்றால், ஆன்மா வரவர நயப்படுகின்றது. ஆன்மா நயப்படுவதற்கு அடையாளம் அதனுடைய சரீரம் நயப்படுதல். மிருகசரீரம் மனிதசரீரத்திலும் நயந்ததன்று. ஆதலால் மனிதசரீரம் எடுத்த ஆன்மா மிருகசரீரம் எடுக்கமாட்டாது என்பதே.

இவர்களுடைய நியாயத்திலே பிழை எதுவென்றால் ஆன்மநயத்துக்கு சரீரநயம் அடையாளம் என்பது. சரீரநயத்துக்கும் ஆன்மநயத்துக்கும் தொடர்பு இல்லை. ஆன்மநயம் குணத்தினாலே விளங்கும். கொடிய தீயரான மனிதரிலும் பார்க்க நற்குணமுள்ளதாகிய பசு மேலான ஆன்மா. மனிதருளுள் நல்ல சரீரமும் விவேகமும் உள்ளவர்கள் தீயவர்களாய் இருக்கிறார்கள். மெலிந்த சரீரமும் விவேகக் குறைவும் உள்ளவர்கள் அநேகர் நற்குணம் உள்ளவராக இருக்கின்றார்கள். நற்குணம் உள்ளவர்கள் உயர்ந்த ஆன்மாக்கள். ஆதலால் சரீரம் குறைவாய் இருத்தலினாலே ஆன்மாவும் தாழ்ந்ததாய் இருத்தல் வேண்டுமென்ற எண்ணம் பிழை. மனிதசரீரம் எடுத்த ஆன்மா எந்தச் சரீரமும் எடுக்கலாம். அப்படி எடுக்கக் கூடுமாதலினாலே தான் அப்பர் சுவாமிகள் கீழ்கண்டவாறு அருளினார்:

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவாதிக்க வரந்தரல் வேண்டும் இவ்வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற் கங்கைசெஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.

சைவப் பெரியார் க. சிவபாதசுந்தரம்

## சிந்தனை 22

என்றும் நிலையாக உள்ள உண்மையை உணர்ந்தவர்களை ஞானிகள் என்கிறோம். ஞானியே எனக்கு மிகவும் நெருக்கமானவன் என்கிறார் கீதாசிரியர். ஞானம் என்பது முழுமையானது – நிறைவானது.

ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்மத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே

என்பது திருமந்திரம். ஞான மார்க்கத்தை சன்மார்க்கம் எனவும் அமைப்பர். ஞானத்தின் அடையாளம் மௌனம். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்கள் ஞானத்தில் முடியும். ஆன்ம அனுபவமே ஞானமாகும். தங்க நகையை நகையாகப் பார்ப்பது சிறப்பல்ல. தங்கமாகக் காண்பதே ஞானம்.

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்.

அறிவை அறியாமை மறைக்கிறது. அந்த மறைப்பபை நீக்குவது ஞானம். மறைப்பை ஆவரணம் என்பர். காரியத்தை நாடாமல் காரணத்தை உணரும் மார்க்கம் ஞானமார்க்கம். ஞானிகள் தம்மில் வேறான எதையும் காணமாட்டார்கள். வினையின் நீங்கி விளங்கிய அறிவர்கள் அவர்கள். உடல் பற்றிய உணர்வை முற்றிலும் கடந்தவர்கள். செத்துத் திரிவர் சிவஞானியர்களே என்கிறது திருமந்திரம். உடலில் இருக்கும் போதே பிறவியிலிருந்து விடுதலை பெற்று நிற்பதால் ஞானியரைச் சீவன்முத்தர் என்று அழைப்பர். ஞானியின் உடம்பை ஆலயம் எனக் கொள்ளவேண்டும். ஞானிக்கு தானற்ற தன்மை, தான் அவனாதல், சிவமான இயற்கை ஆகிய மூன்றும் அடையாளங்கள் என்கிறார் திருமூலர். ஞானிகளின் மொழி மௌனம். ஞானிகள் சமநோக்கு உடையவர்கள். ஞானிகளை வினைகள் நெருங்குவதில்லை.

## சிந்தனை 23

**Honesty and faith are the subtle bonds that serve to hold individuals together in corporate life. They go together. If honesty did not exist one man will not believe another. Faith or trust between man and man will die out. Suspicion and doubt will fill all minds and life in society would soon become impossible. Fear and deep distrust will reign supreme. Each will regard all others as his enemies. Honesty is the best policy. But it is much more than a mere policy. Honesty is also the best principle to adopt in life. It must become a principle both subjectively and objectively, 'self-regardingly' as well as 'others-regardingly'. You must be honest with yourself, i.e. true to your inner self. You must be conscientious. Then you must also be honest in your dealing with others. Both are indispensable. If you regard honesty as an expedient and temporary policy then it becomes hypocrisy.**

**Honesty is not a virtue meant only for any particular section of a mankind, as loyalty is to the subordinate, chastity is to the married women and filial piety and obedience is to children and students. Honesty is a universal virtue that must be cultivated by every human being. Masters, servants, parents, children, doctors, lawyers, merchants, businessmen, judges and administrators, all without exception should be scrupulously honest. It is a sacred duty and moral obligation in the interest of social solidarity.**

**An honest man is dear to the Lord. He showers His Grace and blessings upon such a one. Honesty never goes unrewarded in the long run. The honest man comes to be honoured by all.**

***Swami Sivananda, Founder of Divine Life Society***

## சிந்தனை 24

உலக இயக்கம் அனைத்திற்கும் சக்தியே காரணம் என்பதை வகையில் சக்தியிருந்தால் செய் இல்லையேல் சிவனே என்று சும்மா இரு என்று சொல்லும் பழமொழி ஒன்று தமிழில் உண்டு. சிவம் சும்மா இருப்பது. சிவத்தையும் இயக்குவது சக்தியே என்பர் சிலர். தொழில் வேறுபாட்டினாலே சிவசக்திக்குப் பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானாசக்தி, கிரியாசக்தி என்ற தொடக்கத்தனவாகப் பல பெயர்கள் உண்டு. இவற்றுள் பராசக்தி அருளைச் செய்யும். ஆதிசக்தி ஆன்மாக்களின் மலம் பக்குவப்படுவதற்காக ஆரணி, ரோதயித்திரி, ஜனனி என்னும் சக்திகளைக் கொண்டு ஏனைய நான்கு தொழில்களையும் செய்விக்கும். இவ்வைந்து தொழில்களையும் நியமித்தும், அறிந்தும், செய்தும் அமர்கின்ற சக்திகளை முறையே இச்சாசக்தியென்றும், ஞானாசக்தியென்றும், கிரியாசக்தியென்றும் சொல்லப்படும்.

சிவபெருமானை அவரது அடியார்கள் சேர்வதற்குச் சக்திதான் துணை என்பர் உமாபதி சிவாச்சாரியர்.

> தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி
> பின்னமிலான் எங்கள் பிரான்.

தன்னிலைமையை நிலையான உயிர்கள் அடையச் செய்யும் சக்தியோடு பிரிவில்லாதவன் எங்கள் சிவபெருமான் என்கிறார். எனவே சக்திதான் உயிர்களைச் சிவத்தோடு சேரச் செய்கிறது என்பது சைவ சித்தாந்தக் கொள்கை.

நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளையும் ஒருசேர மதித்து அந்த வினைகள் தன்னைப் பற்றாத வண்ணம் பற்றற்ற நிலையில் கடமை நோக்கோடு நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே என்ற நிலையில் ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே என்ற உணர்வோடு நான், எனது என்ற நிலையைக் கடந்த காரியங்களைச் செய்பவர்களை விட்டு மலம் நீங்கும். இப்படி மலம் நீங்கிய பின் திருவருட்சக்தி ஆன்மாவில் பதியும். எனவே திருவருட்சக்தி பதிதல்தான் ஆன்மாக்கள் சிவத்துடன் சேர்வதற்குரிய கடைசி நிலை.

---

## சிந்தனை 25

**In order to gain liberation a number of factors that are very difficult to gain required. These are described in the third verse of *Vivekacudamani*.**

***Only through God's grace may we obtain those three rarest advantages – human birth, the longing for liberation, and discipleship to an illumined teacher.***

**Here, all that is necessary for liberation is reduced to three things. Within these three all other requirements are included. These are human birth, desire for liberation, and the help of enlightened person. These three are caused by the grace of the Lord. Grace is the result of your own good *karma*. It is not something that the Lord goes about distributing to people, as he likes. Grace is always available. You invoke the grace. Getting this grace implies a lot of effort, a lot of *karma*, a lot of prayer. To win the Lord's grace is not easy. You have to earn it.**

***Swami Dayanada Saraswathy***

---

## சிந்தனை 26

**In Saiva Siddhantha, God is of the form of knowledge. This aspect of God is to be known by the person who attains knowledge. For those who are yet to gain knowledge, the same God appears in three forms – as having forms, formless and form-formless. Here the continuity of thought is important. It is not that God is knowledge is different from God as having forms, formless and form-formless. There is no change in God. There is only in our perspective. When we get spiritual maturity, God's true nature as knowledge is revealed to us. Until then we see God as having forms, formless and form-formless. This is explained in verse 5 of *Tiruvarutpayan*. The person, who could not view knowledge as God's nature, is not to be termed as a man devoid of knowledge. This man is like a child and his knowledge has to be developed through proper training. The person who could view God in any one of the three, namely, forms, form-formless and formless, has taken the first step in spirituality and if that person is sincere in worship, then God takes care of the person's spiritual development and he will get true nature of God as knowledge.**

### சிந்தனை 27

மனிதனின் பிறவி உயர்ந்த குறிக்கோளை இலக்காகக் கொண்டு அமைதல் வேண்டும். இறைவனின் திருவடிப்பேறு பெறுதல் என்ற பேரின்பப் பெருநிலையே, மனித வாழ்வுக்குரிய உயர்ந்த குறிக்கோள். இத்தகைய குறிக்கோளைப் பெறாத வாழ்வு சிறப்புடையதன்று. எனினும், உலகில் வாழும் மனிதரில் பலரும், தாங்கள் திருவடிப்பேறு பெற வேண்டும் என்ற குறிக்கோள் இன்றியே வாழ்நாளை வீணாகக் கழிக்கின்றார்கள். பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்றும், அப்பிறவியின் உண்மைப் பயனைப் பெறாமல், குறிக்கோள் இல்லாது கெட்டழியும் மனிதர்களின் அவலத்தைத் தன்மேல் ஏற்றி, அப்பர் கழிவிரக்கம் தோன்றப் பாடுகிறார்.

பாலனாய்க் கழித்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழித்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழித்த நாளும் குறிக்கோள் இலாது கெட்டேன்.
சேலுலாம் பழன வேலித் திருக்கொண்டீச் சுரத்து ளானே.

மனிதன் பிறந்து, வாழ்ந்து, இறக்கும் வாழ்வு சாதாரணமானது. மனிதப் பிறவிக்குரிய நோக்கம் அங்கு நிறைவேறவில்லை. தனக்குக் கிடைத்தற்கரிய பிறவி கிடைத்தப் பேற்றை எண்ணி, அதைப் பயனுள்ளதாகச் செய்து கொள்ளும் வாழ்வே பெருவாழ்வு. உலகியலில், பலர் வாழ்வு பயனற்ற வாழ்வாகக் கழியும் நிலை கண்டு, சுந்தரர் வருந்திப் பாடுகிறார்.

நல்வாயில் செய்தார் நடந்தார் உடுத்தார்
நரைத்தார் இறந்தார் என்று நானிலத்தில்
சொல்லாய்க் கழிகின்றது அறிந்தடியேன் தொடர்ந்தேன்
உய்யப் போவதோர் சூழல் சொல்லே?

இறைவனைப் பாடுதல், பணிதல், உடலின் மீது கொண்ட பாசத்தை நீக்குதல், இறைவனை நாடி உருகுதல், இறையைத் தேடுதல் முதலிய பணிகளே வாழ்வின் குறிக்கோள் என்று கூறி அதனை மறந்த நிலையில் மயங்கும் மக்கள் நிலையைத் தன்மேல் ஏற்றி மணிவாசகரும் பாடியுள்ளார்.

பாடிற்றி லேன்பணி யேன்மணிநீ ஒளிதடதய்க்குப் பச்சூன்
சூடிற்றி லேனை விடுதிகண் டாய்வியந் தாங்கலறித்
தேடிற்றிலேன் சிவன் எவ்விடத்தானெவர் கண்டனரென்று
ஓடிற்ற லேன்கிடந்து உள்ளுரு கேன்நின்று உழைத்தனனே.

இம்முறையில், இறைவனின் திருவடிப்பேறு பெறுதல் என்ற உயர்ந்த குறிக்கோளையே இலக்காகக் கொண்டு உலகியல் வாழ்வை மக்கள் பயனுள்ளதாகச் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தோடு, அருளாளர்கள் உளமுருகிப் பாடியுள்ளார்கள்.

---

### சிந்தனை 28

**Conception of *Sakti* is peculiar and important in Saiva Siddhantha. *Siva, Sakti* and *Pati* are three concepts denoting the same Godhead. God in relation to godself (i.e. without relation to the world and the individual) is called *Siva*. God in relation to the individual self is *Sakti* and the same God when considered as the agent of five actions namely creation, sustenance, destruction, concealment and bestowal of grace is called *Pati*. Even though, we denote three terms, *Siva*, *Sakti* and *Pati*. They are three aspects of the same being. They differ only with regard to function. *Siva* is the static aspect, while *Sakti* and *Pati* are dynamic aspects. Manifested *Siva* is *Sakti* and unmanifested *Sakti* is *Siva*. We may consider the significance of Nataraja, dancing Siva, one of twenty-five forms of Siva. According to tradition, *Devi Sivakama Sundari* is to be worshipped along with Nataraj. In the *Suta samhita*, a part of *Skanda Purana*, *Siva* is described as the dancing consort of *Ambika*, the Lord of the assembly of the highest**

**philosophers, beyond the vision of even the greatest sages and He graciously made Himself visible in His benign attitude. Devi in her great mercy witnesses what is impossible of being seen by others. Devi gazes at the dance of Siva and passes the benefit of vision to the children, the devotees.**

### சிந்தனை 29

**The fact is, the Lord's Form cannot be seen objectively. It has to be realised through what is known as 'Pathi-Gnanam' (God-Realization). All Sadanas and all worship, as practiced by all religionists, resolve into theforms of idolatry in some form orother. Says Meikandan:**

பாவகமேல் தான் அசத்தாம், பாவநாதீதம் எனில்
பாவகம் ஆம், அன்று என்னில் பாழாது ஆம், – பாவகத்தைப்
பாவித்தல் தான் என்னில் பாவகம் ஆம், தன் அருளால்
பாவிப்பது பரம், இல் பாழ்.

**If God can be contemplated with the mind, He becomes *Asat* (or destroyable, as all objects seen by the senses whether external or internal are destroyable). If He is beyond contemplation, He is a sham only (and of no benefit to us). If He is neither thinkable nor unthinkable He becomes a non-entity. If you meditate on the unknowable by assuming (the same as being possesed of certain attributes), then too He is no more than a sham. Know that Supreme Lord is realizable with His Grace and hence is not a non-entity.**

### சிந்தனை 30

அருளாளர்கள், மனிதன் குறிக்கோளோடு வாழ்ந்து பெறுதற்குரிய பொருட்களாக, அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் குறிப்பிடுவர். இவற்றுள் அறம், பொருள், இன்பம் என்பன உலகியற் பேறுகள். வீடு என்பது மறுமைப் பேறு.

ஈதல் அறம், தீவினை விட்டு ஈட்டல் பொருள், காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டது இன்பம், இறைவனை நினைத்து இம்மூன்றையும் விடுவது வீடு என இந்நான்கையும் ஔவையார் எளிமையாக உணர்த்தியுள்ளார்.

திருவள்ளுவர், மனிதன் தன் வாழ்வில் பெறுதற்குரிய இந்நான்கு பேறுகளையும் பெறுவதே சிறந்த வாழ்வு என்பதை உணர்த்தும் வகையில்,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

என மொழிந்துள்ளார். வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் என்பது உலகியல் வாழ்வுப் பேறுகளாகிய அறம், பொருள், இன்பம் என்ற மூன்று. வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுதல் என்பது மறுமைப் பேறாகிய வீடு என்பது. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் முறையாகப் பெற்றவர் வீடுபேறு என்னும் மறுமைப்பேற்றையும் இயல்பாகவே பெறுவர் என உய்த்துணர வைத்துள்ளார். நெறிகளைப் பின் பற்ற வாழும் வாழ்வு, வீடுபேறு என்னும் குறிக்கு இட்டுச் செல்லும் என்னும் மெய்ம்மையை அருளாளர்கள் பலரும் உணர்த்தியுள்ளனர்.

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறைஎனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில் சிவகதி விளையும் அன்றே.

என்பது அப்பர் பாடல். மெய்ம்மையாம் உழவைச் செய்து என்பது முதலாகச் செம்மையுள் நிற்பராகில் என்பது ஈறாக, மனிதனின் உலகியல் வாழ்வு நெறிகள். சிவகதி விளையும் என்ற தொடர், நெறிகள் இட்டுச் செல்லும் குறியை உணர்த்துகிறது.

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் யூட்டி உயிரெனும் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழனடி காணலாமே.

இப்பாடலில் உடம்பெனும் மனையகத்துள் என்பது முதலாக, எரிகொள இருந்து நோக்கில் ஈறாக வாழ்வுக்குரிய நெறிகள் விளங்கப்பட்டுள்ளன. கடம்பமர் காளை தாதை கழனடி காணலாமே என்பது நெறிகள் காட்டும் குறி.

---

## சிந்தனை 31

சைவசமயத்தின் தனிச்சிறப்பு முப்பொருள் உண்மையை நிருபிப்பது. பதி, பசு, பாசம் என்னும் மூன்றும் ஆதியும் அந்தமும் இல்லாதவை. தோற்றக் கேடு அற்றவை. பதி சச்சிதானந்தன். பாசம் சடம். ஆன்மா அறிவிக்க அறியுந் தன்மை உடையது. அதன் குணம் சாந்தத்தின் வண்ணம். ஆகவே சதசத்து என்று சொல்லப்படும். பாசம் தளை என்பன ஒரு பொருள் சொற்கள். ஆன்மா இயல்பாகவே பாசத்தின் தளைப்பட்டு இருப்பதனால் பசு என்னும் பெயர் பெறுகின்றது. ஆன்மா இறைவன் அருளைப் பெற்று இறைவன் திருவடி சேரும் போது பாசம் பந்திக்காது. இதையே திருமூலரும்,

பதி பசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற் பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்
பதியணுகிற் பாசம் நில்லாவே.

என்கிறார். ஆகவே, தளைப்பட்டிருக்கும் ஆன்மாக்கள், தளையை நீக்கி இறைவன் அருளைப் பெற்று அவனடிக்கீழ் இன்பம் துய்ப்பதே பெருநோக்காகக் கொண்டிருக்கும். அதற்கு எடுத்துக் கொள்ளும் முயற்சியே சாதனை எனப்படும். சாதனை சமய அமைப்பில் வேறுபாடுடையதாக இருக்கின்றதைக் காண்கிறோம். காலத்துக்குக் காலம் தோன்றிய மகான்கள், தீர்க்க தரிசிகள் அப்போதைய மனிதன் அடைந்திருக்கும் வளர்ச்சிக்கும் சூழ்நிலைக்கேற்ப, சாதனைகளை ஏற்படுத்தி உள்ளார்கள்.

சைவமரபில் வந்த அடியார்கள் வேதம், சிவாகமம் ஆகியவற்றில் உள்ள ஞானப் பொருளைத் தமிழில் ஆன்மாக்கள் அறிந்து ஈடேறும் பொருட்டு, தோத்திர சாத்திரமாக இயற்றியுள்ளார்கள். இவை எல்லாம் இறைவனை வழிபட்டு அவன் அருளைப் பெற்று, திருவடி நிழலில் இன்பம் துய்ப்பதற்கு உறுதுணையாக உள்ளன. சாத்திரங்கள் அனைத்தும் பதி, பசு, பாச உண்மை இலக்கணம், சாதனை, பயன் ஆகியவற்றை விளக்குவன. பதி அருளைப் பெறுவதற்குச் சாத்திர விளக்கம் அத்தியாவசியம். அது போல, பாடிப் பரவிப் பரவசப்பட்டு பக்தி செலுத்துவதற்குத் தோத்திரப்பாக்கள் அவசியமாகிறது.

---

## சிந்தனை 32

சைவ சித்தாந்தம்: சீவன்முத்தி

முத்தி என்பது இன்பம். என்றும் நிலையாய உள்ள சச்சிதானந்தப் பிழப்பான இறைவனை, அவருடைய அருளால் அவருடன் எந்த ஆன்மா பக்குவ ரீதியாகப் பேரின்பத்தை அடைய முயலுகிறதோ அவ்வான்மா சீவன்முத்தி நிலையை நாடிச் செல்கிறது.

என்றும் நிலைத்திருக்கும் பதி, பசு, பாசப் பொருட்களின் ஏன் ஆன்மா மாத்திரம் முத்தி நிலையை அடையவேண்டும்? என்றால், சச்சிதானந்தப் பிழம்பாகிய இறைவனுக்கு

முத்தி நிலை வேண்டாம். பாசங்களாகிய ஆன்மா அல்லாத ஏனைய பொருட்களுக்குச் சுயஅறிவும் இல்லை. அறிவித்தால் அறியுந் தன்மையும் இல்லை. ஆனவகையில் ஆன்மா மாத்திரமே முத்தி நிலையை அடைய முடியும்.

அப்படியானால் ஆன்மாவின் உண்மையான தன்மை என்ன என்பதையும் ஆராய்ந்து அறிய வேண்டியது அவசியமாகும். பதி, பசு, பாசம் என்ற முப்பொருட்களுள் பதியாகிய இறைவனுக்கு இயற்கை அறிவும் முற்றறிவும் இருப்பதால் வேறு ஒரு பொருள் அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. பிரபஞ்சத்துக்கு அறிவும் இல்லை. அறிவித்தாலும் அறியும் தன்மையும் இல்லை. ஆன்மாவும் தனக்கென ஓர் அறிவு இல்லாதிருந்தாலும் அறிவிக்க அறியும் தன்மை உளதாதலால் இறைவனைப் போல் சத்தும் அல்லாமல் ஏனைய பிரபஞ்சத்தைப் போல் அசத்தும் அல்லாமல் இறைவனால் அறிவிக்க அறியும் தன்மை தன்னுள் உளதாதலால் ஆன்மாவை விசேஷமாகச் சதசத்து என்பர். இந்தச் சதசத்தான ஆன்மா, சதத்தைச் சார்ந்து அசத்தை அறிவதாயுமான தன்மை உளதாகும். இத்தன்மையை, சிவஞானபோதத்தில் இருதிறனறிவுள இரண்டலா ஆன்மா எனக் கூறப்பட்டுள்ளது.

சத்தான சிவத்தின் முன்னர் அசத்தாகிய பிரபஞ்சம் முனைத்துத் தோன்றாது. அதாவது, சிவம் அசத்தில் வியாபித்திருந்தாலும் பிரபஞ்சம் சிவத்துள் ஒடுங்கி தனது பிரகாசம் மழுங்கிக் கிடக்கும், சூரியன் முன் இருள் போல். சத்தாகிய சிவம், அசத்தை அறியாது. அசத்தாகிய பிரபஞ்சம் சிவத்தை அறியாது. இவ்விரண்டும் அல்லாத சதசத்தாகிய ஆன்மா, மற்றைய அற்றைய இரண்டினையும் அறியும் தன்மை பெற்றுள்ளது. இவ்விரண்டையும் அறியும் முறையில் தன்னையும் அறியும்.

## சிந்தனை 33

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. திருமந்திரம் 2716

முன்னைய பிறவிகளிலே செய்த தீவினைகளின் காரணமாகவே சிவசிவ என்றே கூறாமல் சிலர் வாழ்கின்றார்கள். எப்படிப்பட்ட கெடுதலான வினைகளைக் கொண்டோரும் சிவசிவ என்றே பிரார்த்தனை செய்திடுவாராயின், அவர்கள் செய்த கெடுதலான வினைகள் யாவும் கெட்டொழியும். அத்துடன், அவர்களும் தெய்வீகமான தேகமடைந்து துலங்குவர். அத்தகையோருக்கு, அங்ஙனம் சிந்திப்பதால் சிவகதி என்பதும் சித்தியாகும். சகல விதமான தத்துவங்களையும் விடுத்தவாறு, உயிரை சிவசக்தியுடன் சார்ந்திடச் செய்யும் உத்தம சிவகதியிலே சார்ந்திருப்பதென்பது, சிவசிவ என்றே ஓதுவதால் சாத்தியமாகும்.

**“SIVA SIVA” LEADS TO SIVA STATE**

**They chant not “Siva Siva”; Verily are they of evil Karma; Chant “Siva Siva”, Your evil Karmas perish; Deva you become; Yours shall be the Siva-State too.**

## சிந்தனை 34

ஒரு யோகி, சொகுசான வாழ்வு, கடுந்தவம் ஆகிய இரண்டு தீவிரங்களையும் விலக்க வேண்டும். அவன் பட்டினி இருக்கவோ, உடலைத் துன்புறுத்தவோ கூடாது. அப்படிச் செய்கிறவன் யோகியாக முடியாது என்று கீதை கூறுகிறது. பட்டினி, கிடப்பவனும் தூங்காது விழித்திருப்பவனும், அதிகம வேலை செய்யாது இருப்பவனும் யோகியாக முடியாது.

சுவாமி விவேகானந்தர்

## சிந்தனை 35

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெளியும் அடற்கினாற்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே. திருமந்திரம் 2883

உயிராகிய பார்ப்பானின் சரீரத்தின் உள்ளே ஐந்து இந்திரியங்களான (மெய், வாய், கண், மூக்கு, செவி) பால்கொண்ட கறவைப் பசுக்கள் விளங்குகின்றன. அவைகளைத் தக்க முறையியோடு அடக்குபவர்கள் இல்லாமல், தம் விருப்பம் போலவே புலன்கள் எல்லாம் போவனவாக இருக்கின்றன. எனவே, உயிர்ச் செறிவை இயக்குவித்திடும் பரசிவம் என்றதாகிய மேய்ப்பவரும் புலன்கள் ஏகிடும் விருப்பத்தை விடுக்குமாறு செய்தால், உயிரிடத்திலே சார்ந்ததான இந்திரியங்களான பசுக்கள் யாவும் பேரானந்தமாக பால் என்பதைச் சுரக்கும். லௌகீக நோக்கிலே அலைகின்ற இந்திரியங்களை அகநோக்கிலே நிர்மாணித்தால், பேரானந்தம் சித்தியாகும் என்பது தாத்பரியம்.

**CONTROL SENSES**

**In Brahmin's home are Milk Cows Five (senses); With none to herd them, they stray uncontrolled; If a cowherd there is, and controlled they are, The Five Cows will milk in abundance give.**

---

## சிந்தனை 36

இறைவனுக்குச் சேவை செய்ய விரும்பும் ஒருவன் எப்போதும் போற்றுதலுக்குரிய அச்சேவையிலேயே மூழ்கி இருப்பான். இறைவன் முன்னிலையில் எவ்வித இன்னலும், இடையூறும் அவனைத் தொந்தரவு செய்ய இயலாது. இன்னலும் இடையூறும் ஒன்றை அடையும் வரைதான் இடர் செய்யும். அதன் பின் முழுக்கவனமும் அனுபூதியில் நிலைத்துவிடும். கடந்த காலப் போராட்டமும், வேதனையும் மறந்து விடும்.

---

## சிந்தனை 37

மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனையுள் இருந்த பருந்தது போல
நினையாத வர்க்கில்லை நின்இன்பந் தானே திருமந்திரம் 47

இல்லற தர்மத்தை மேற்கொண்டு இறைத்தொண்டு புரிபவர்கள் உத்தமமான மேலான தவசிரேஷ்டர்களுக்கு நிகரானவர்கள். சதா தியானபாவத்துடன் ஒன்றியிருப்பவர்கள் பனைமரத்தில் வசிக்கும் பருந்து, உணவுக்காக மட்டும் வெளியே வந்து இரையெடுத்து விட்டு, மற்றைய வேளைகளில், அப்பனை மரத்திலே வசிப்பதைப் போல, உலகாயதத்தில் தான் செய்ய வேண்டிய கடமைகளைச் செவ்வனவே செய்துவிட்டு மற்றைய வேளைகளில் பரமனுடைய சிந்தனையை வளர்த்துக் கொண்டு, அதிலே ஆழ்ந்து விடாதவர்களுக்கு ஆண்டவனுடைய சாயுஜ்யமான ஆனந்தம் என்பது சித்தியாகாது. இல்லறத்தை அனுட்டித்த போதிலும், ஆழ்ந்த சிவசிந்தனை பேரானந்தத்ததை நல்கும் என்பது கருத்து.

**BLISS DENIED**

**They, who enshrine Him in themselves equal great sages. Contemplating Him in their hearts, they will love and adore Him. Those who do not think Him do not get happiness. Even as the kite sitting on a palm tree does not enjoy the palm fruit.**

---

### சிந்தனை 38

எல்லா நேரங்களிலும் எல்லா சந்தர்ப்பங்களிலும் இறைவனுடைய நாமத்தை அன்புடன், ஈடுபாட்டுடன் நினையுங்கள். மலையாகக் குவிந்துள்ள பாவங்களைத் தூள் தூள் ஆக்கும் இடியாகும் நாமம். தீவிர உலகப் பற்று எனும் பயங்கரமான நோயை நிச்சயமாக குணமாக்கும் மருத்துவம் அது. குண்டிப்பாக அந்த நாமம் சாந்தி அருளும்.

### சிந்தனை 39

ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந் தார்களே. திருமந்திரம் 145

தேகம் உயிரற்று விழுந்த மாத்திரத்தில் ஊராரும், உற்றாரும் ஒன்றாகச் சேர்ந்து அபரிமிதமாக ஒலி எழுப்பி, அழுது, அரற்றி, அதுவரை அத்தேகத்துடன் வழங்கி வந்த நாமத்தை மாற்றி பிரேதம் என்று பெயர் சொல்லி, தூாதுவலைச் செடிகள் நிறைந்த சுடுகாட்டில் சிதையில் கிடத்தி, தீயிட்டுக் கொளுத்தி பின்னர் தண்ணீரில் மூழ்கிக் குளித்து, இந்நாள் வரை இப்படி ஒரு மனிதர் இருந்தார் என்பதை அடியோடு மறந்து போனார்களே. தேகத்தைச் சுட்ட மாத்திரத்தில், அவரிடம் கொண்ட நட்பும், உறவும் சம்பந்தப் பட்டவர்களால் அகற்றப்படுகின்றது என்று கூறி வாழ்வின் நிலையாமை குறித்து பேசப்படுகின்றது.

**<u>HOW SOON THE DEAD ARE FORGOTTEN</u>**

**The neighbours gathered together wailing loud and long. Denied him now a name, called him corpse. And bore him to the burning ghat and the body burnt. Then did a ceremonial dip- and memory of him fades away.**

### சிந்தனை 40

அஸத்தோமா சத்கமய, தமஸோமா மாஜோதிர்கமய, ம்ருத்யோர்மா அம்ருதம் கமய. இது தான் சாந்தி மந்திரம். ஓ இறைவா! இவ்வுலகப் பொருட்களின் மூலம் நான் மகிழ்ச்சியடையும் போதே, உண்மையற்ற பொருட்களை நான் மறக்கச் செய்யுங்கள். நிரந்தரமான மகிழ்ச்சியை அடைவதற்கான வழியைக் காட்டுங்கள். இது முதலாவது பிரார்த்தனை. ஓ இறைவா! ஒவ்வொரு பொருளிலும் இயல்பாகவுள்ள ஆத்ம ஜோதியை அறிவதன் மூலம் கிட்டும் பரமானந்தத்தை அல்லது அழியாத்தன்மையை அடைவதற்குரிய ஆசீர்வாதம் தங்கள் அருளால் கிட்டட்டும். இது இரண்டாவது பிரார்த்தனை.

### சிந்தனை 41

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்காகத் தள்ளி மறித்துவைப் பாரே. திருமந்திரம் 200

நல்லவையல்லாத மாமிசத்தைச் சாப்பிடும் நீசர்களை, அனைவரும் பார்க்கும்படியாக காலனின் ஏவலர்கள், கறையான்கள் போல தொடர்ந்து, அரித்துப் பாழாக்கி, பின்னர் வெம்மை மிகுந்த நரகக்குழியில், மல்லாக்கப் படுத்திருக்கும் வண்ணம் கிடத்தித் துன்புறுத்துவார்கள். மாமிசம் புசிப்பவர்கள் நிலை நரகத்தில் உழல்வதே என்பது கருத்து.

**MEAT EATERS WILL HAVE TO FACE HELL'S TORMENTS**

**The ignoble ones who base flesh do eat, Death's agents bind them fast for all to see; And push them quick into the fiery jaws of hell, And fling them down there forever to be.**

## சிந்தனை 42

அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. திருமந்திரம் 270

தக்க பக்குவமில்லாதவர்கள் அன்பு என்பது வேறு என்றும் சிவம் வேறு என்றும் கருத்துரைப்பார்கள். அன்பின் பரிபக்குவத்தால், சிவபொருளாகிய அறிவு துலங்கும் என்ற கருத்தை மேம்பட்டவர்கள் மற்றும் கீழானவர்கள் அனைவருமே அறிவதில்லை. அன்பு தான் சிவமாகத் துலங்கி அருள் பாலிக்கின்றதென்ற இரகசியத்தைத் தெளிந்து உணர்ந்த பின்னர், அன்பே தன் ரூபமாகக் கொண்டு, பரசிவப் பொருளாகவே திளைத்தார்கள். அன்பு என்னும் உயர்ந்த பண்புணர்வு, சிவப்பொருளை விளக்கும் என்பது கருத்து.

**LOVE AND SIVA ARE ONE**

**The ignorant prate that Love and Siva are two, But none do know that Love alone is Siva. When men but know that Love and Siva are the same, Love as Siva, they ever remain.**

## சிந்தனை 43

லாபம், இன்பம், மகிழ்ச்சி அடையும் போது துள்ளிக் குதிப்பதும், நட்டம் அடையும் போது துவண்டு விடுவதும் பொதுவாக எல்லா மனிதர்களிடமும் இயல்பாகக் காணப்படும் குணங்கள். அப்படியாயின் சாதகரிடம் இருக்கும் சிறப்பு யாது? விழிப்புடன் இரு, தவிர்க்க முடியாத துன்பத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள் என்னும் கோட்பாட்டை அவன் மறக்கக் கூடாது. துன்பங்களும், இழப்புகளும் உங்களை அழுத்தும் போது மனம் தளர்ந்து அவசரப்பட்டு ஏதாவதொரு செயலில் இறங்காதீர்கள். அவை உங்களுக்கு ஏன் நடந்தது என்று ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். அவற்றை வெல்வதற்குரிய சில உபாயங்களைக் கண்டுபிடிக்க முயலுங்கள் அல்வது அவற்றை அசட்டை செய்து சாந்தியான சூழலில் இருங்கள்.

## சிந்தனை 44

குன்றங்களுக்குத் தெய்வம் முருகன். குறிஞ்சி நிலத்தலைவன் அவன். குன்றிலிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம். குன்றுக்கு உரிமைக்காரன் அவன். குன்றக்கிழவன் என்பர் அப்பெருமானை. கிழமை என்றால் உரிமை என்று பொருள். குன்றக்கிழவன் என்றால் குன்றங்களின் உரிமையாளன் என்று பொருள். எனவே எல்லாக் குன்றங்களிலும் குமரன் இருக்கின்றான். சில மலைகளில் அவனுக்குக் கோயில் உண்டு. பல மலைகளில் இல்லை. இருப்பினும், கோயில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவன் அருளாட்சி அங்கே பரவி இருக்கும். பிற தெய்வங்களுக்கு கோயில் இருந்தாலும் அவர்கள் அங்கேகுடி வந்தவர்களே. உரிமை முருகனுக்கு மட்டுமே.

## சிந்தனை 45

இகழ்ந்தும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்தருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே. திருமந்திரம் (280)

ஜீவர்கள் தன்பொருட்டு அன்பு பாராட்டுதலையும், தன்னைக் குறித்து இகழ்ச்சி மொழிகளைச் சொல்லுவதையும், தன்பால் உத்தமமான இறையன்பு பாவனையுடன் இருத்தலையும் பகவான் உண்மையாகவே அறிவான். தந்த பக்குவ நிலைக்கேற்ப ஆனந்தமுற்று, கிருபை செய்வான். தன்பால் பெருகி வருகின்ற அன்பு என்ற உணர்வினை முழுமையாக பிரயோகிக்க வல்லபவர்களுக்கு தானும் இன்பமாகவே, அன்பு வளர்க்கும் படியான அளவில் கடாட்சத்தை வாரி வழங்கியருள் செய்வான். இறையன்பு செய்தோரை பரமன் மகிழ்ந்தறிந்து, கிருபை செய்வான் என்பது கருத்து.

**LORD REWARDS AS MERIT BEFITS**

**What we scorned and what we gained, He knows; The righteous Lord in Love rewards as merit befits; Who, with burning zeal, seek Him with heart of love To such, well-pleased, He His Grace awards.**

## சிந்தனை 46

எவ்வுயிரும் இன்புற்றிருக்க, எவ்வுயிருக்கும் அமைதி நிலவுக, எவ்வுயிரும் ஆனந்தம் பெறுக, எத்திசை உயிர்களும் இவற்றைப் பெறுக. இவ்வாறு பல தடவை மனதில் தியானித்தால் நீங்களும் நலத்தை அடைவீர்கள். உங்கள் நலத்தையும் இன்பத்தையும் எளிதில் பெருக்கும் வழி, பிறர் இன்புற்றிருக்க உதவுவது தான் என்பதை நாளடைவில் அறிந்து கொள்வீர்கள்.

சுவாமி விவேகானந்தர்

## சிந்தனை 47

சிவன்சத்தி சீவன் செறுமல மாயை
அவஞ்சேர்த்த பாச மலமைந் தகல
சிவன்சத்தி தன்னுடன் சீவனார் சேர
அவம்சேர்த்த பாசம் அணுககி லாவே. திருமந்திரம் (2710)

உயரிய ‘சிவாயநம’ என்ற சூட்சும பஞ்சாட்சரத்திலே முறையாகவே சிவன், சக்தி, உயிர், சார்ந்ததான மல, மாயை என்பதானவைகளான ஆணவ, கன்ம, மாயா விலாசங்கங்கள், மாயேயம் மற்றும் திரோதாயி முதலான பஞ்சமலங்களும் அகல, ‘சி’ மற்றும் ‘வ’ அட்சரங்களால் தெளிவிக்கப் பெறுகிள்றதான பரமன் சக்தியோடு ‘ய’ எனற அட்சரமாகிய உயிரும் சார்ந்திருக்க, அல்லலை உருவாக்கிடும் பாசம், உயிர்தனைப் பற்றாததாகியே விளங்கும் என்றவாறு. ஊயிரைப் பற்றிய தான பாசங்கள் அகல, சூட்சும பஞ்சாட்சரடிஜபம் உத்தமமானதாகும் என்பது தாத்பரியம்.

**The letters *Si Va Ya Na Ma* denote Siva, Sakti, Jiva, Mala and Maya respective; Chant it, for the five Pasas Mala to disappear; When with Siva and Sakti, Jiva unites (That is when you say *Si Va Ya*) the harassing Pasas flee away.**

**மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்**

# Md;kPfg; Ngr;Rf;fs;

சைவமன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கீழ்க்கண்ட ஆன்மீகப் பேச்சுக்களின் ஒலி, ஒளி நாடாப் பதிவுகள் விற்பனைக்கு உண்டு. இவற்றைப் பெற விரும்புவோர் கலாநிதி இ. ஸ்ரீ இரவீந்திரராஜாவை **9899 4271** என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

1. பெரியபுராணம் பேராசிரியர் அருண் பாலராவாயன்

| | |
|---|---|
| 7-5-2000: | சைவசித்தாந்தம் |
| 14-5-2000: | சைவசித்தாந்தமும் வேதாந்தமும் |
| 22/23/24-5-2000 | பெரியபுராணம் |

2. ஆறு. திருமுருகன் பேச்சுக்கள்

| | |
|---|---|
| 08-04-2001 | ஆன்மீக வாழ்வில் தர்மம் |
| 09-04-2001 | திருமுறைகள் கூறும் வாழ்க்கைத் தத்துவம் |
| 10-04-2001 | திருமந்திரம் கூறும் வாழ்வு |
| 11-04-2001 | மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் |
| 12-04-2001 | நவீன இந்து சீர்திருத்தம் |

3. திரு. சி. இரட்ணராஜா

| | |
|---|---|
| 03-06-2001 | ஆலய தரிசனம் கருத்தற்ற ஒன்றா? திருவிழாக்கள் மன அமைதியின் நிறைவா? |
| 04-06-2001 | முருகனின் திருவுருவ அமைப்பு, விஞ்ஞான விளக்கம். |

4. சுவாமி பிரம்மானந்தா சரஸ்வதி

| | |
|---|---|
| 01-12-2001 | முருகன் அழகன் |

5. திருமதி பாலம் இலட்சுமணன்

| | |
|---|---|
| 06-01-2002 | திருவாசகமும் மாணிக்கவாசரும் |

6. திருமதி புவனேஸ்வரி அருணாசலம்

| | |
|---|---|
| 10-02-2002 | சிவனடியார் கண்ட நெறி |

7. திருமதி லோகநாயகி சிவசுப்பிரமணியம்

| | |
|---|---|
| 03-03-2002 | முருகன் வழிபாடு |